ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com



**ஈ.கே.எம்.அ.க.மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடுஎட்டாம் வகுப்பு : இரண்டாம் பருவம் :தமிழ்**

**குறுவினா விடைகள்:**

**1.விவேக சிந்தாமணி -குறிப்பு எழுதுக.**

புலவரின் பலரால் பாடப்பட்ட தொகுப்பு விவேக சிந்தாமணி.தொகுத்தவர் யார் எனத் தெரியவில்லை.

**2.தேனை உண்ட வண்டு எவ்வாறு தோற்றமளித்தது?**

வண்டு நாவற் பழம் போலத் தோற்றமளித்தது.

**3.காந்திபுராணம் குறிப்பு எழுதுக.**

காந்திபுராணம் 2034 பாடல்களைக் கொண்டது.காந்தியடிகளைத்தலைவராகக் கொண்டு பாடப்பெற்றது.

**4.அசலாம்பிகை அம்மையார் குறிப்பெழுதுக.**

பெயர்: அசலாம்பிகை அம்மையார்

பிறந்த ஊர்:இரட்டடணை

படைப்புகள்:ஆத்திச்சூடி வெண்பா,திலகர் புராணம்.

சிறப்பு: சிறந்த பேச்சாளர்,இக்கால ஔவையார் என்பார் திரு.வி.க.

**5.வேலுநாச்சியார் - குறிப்பு எழுதுக.**

பெயர்: வேலுநாச்சியார்.

பெற்றோர்:செல்லமுத்து சேதுபதி -சக்கந்தி முத்தாத்தாள்.

பிறந்த ஆண்டு:1772

கணவர் :முத்துவடுக நாதர்

**6.தென்னாட்டின் ஜான்சிராணி என அழைக்கப்படுபவர் யார்?ஏன்?**

தென்னாட்டின் ஜான்சிராணி - அஞ்சலையம்மாள்.காந்தியடிகள் கடலூர் வந்தபொழுது,ஆங்கிலேயரின் தடையை மீறி பர்தா அணிந்து அஞ்சலையம்மாள் குதிரை வண்டியில் அவரை ஏற்றிச் சென்றதால் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

**7.திருமந்திரம் குறிப்பு வரைக.**சைவத் திருமுறையில் 10 வது திருமுறை திருமந்திரம்.

வேறுபெயர்:தமிழ் மூவாயிரம்.

3000 பாடல்கள் கொண்டது.

**8.உயிர் அழியக் காரணம் என்ன?**

நோயால் உடல் அழிந்தால் உயிரும் அழியும்.

**9.தேம்பாவணி - குறிப்பு எழுதுக.**

தேம்பாவணி : வாடாத மாலை,தேன் போன்ற இனிய பாமாலை

.இயேசுவின் வளர்ப்புத் தந்தை சூசையப்பரைத் தலைவராகக் கொண்டது.

அமைப்பு:3 காண்டம் , 36படலம்.

3615 பாடல்கள் கொண்டது.

**10.வீரமாமுனிவர் அறிந்த மொழிகள் யாவை?**

இத்தாலி,இலத்தீன்,கிரேக்கம்,தமிழ்,தெலுங்கு,சமற்கிருதம்.

**11.தமிழின் முப்பெரும்பாகுபாடுகள் யாவை?**

இயற்றமிழ்,இசைத்தமிழ்,நாடகத்தமிழ்.

**12.நாடகம் - குறிப்பு வரைக.**

நாடகம் - நாடு +அகம்.நாட்டை அகத்தில் கொண்டது நாடகம்.

முக்காலத்தையும் அகத்தே கொண்டது நாடகம்.

**13.நாடகம் தோன்ற அடிப்படையாகக் அமைந்தது எது?**

போலச் செய்தல்

**14.நாடகத்திற்கு இலக்கணம் வகுத்த நூல்கள் யாவை?**

முறுவல்,சயந்தம்,செயிற்றியம்,மதிவாணர் நாடகத் தமிழ்,விளக்கத்தார் கூத்து,குண நூல்,கூத்து நூல்,நாடகவியல்.

SSM

**15.நொண்டிநாடகம் - குறிப்பு எழுதுக.**

**செல்வக்குடியில் பிறந்த ஒருவன் ஒழுக்கம் கெட்டு,நோயும் வறுமையும் அடைந்து திருந்தி வாழ்வதாக அமைவது நொண்டி நாடகம்.**

**16.கம்பர் குறிப்பு வரை வரைக**

**பெயர் : கம்பர்**

**ஊர் :தேரழுந்தூர்**

**போற்றியவர்:சடையப்ப வள்ளல்**

**காலம்:கி.பி.12**

**படைப்புகள்:சடகோபரந்தாதி,சரஸ்வதி அந்தாதி ,ஏர் எழுபது,சிலை எழுபது,கம்பராமாயணம் முதலியன.**

**17. கம்பராமாயணம் -குறிப்பு வரைக**

**.தமிழில் கம்பரால் எழுதப்பட்ட நூல் கம்பராமாயணம்.**

**வழி நூல்,**

**பால காண்டம் முதலிய 6 காண்டங்களைக் கொண்டது.**

**18.பாரதிதாசன் இயற்றிய நூல்கள் யாவை?**

**பாண்டியன் பரிசு,குடும்ப விளக்கு,இருண்ட வீடு,தமிழியக்கம்,அழகின் சிரிப்பு முதலியன.**

**19.எழிலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைப் போட்டியின் தலைப்பு என்ன?**

**காட்டுயிரிகள்.**

**20.நீர் மாசடையக் காரணம் என்ன?**

**செயற்கை வேதிப் பொருள்களை நீரில் கலப்பதனால் நீர் மாசடைகின்றது.**

**21.நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் யாவை?**

**ஐம்பெரும் பூதங்கள்,உயிருள்ள பொருட்கள்,உயிரற்ற பொருட்கள்,ஓரறிவு முதல் ஆறறிவு உயிர்கள்.**

**22.இயற்கைச் சமநிலை என்றால் என்ன?**

**உலகில் உயிர்கள் அனைத்தும் இயற்கையிலேயே சமநிலையில் உள்ளதே இயற்கைச் சமநிலை எனப்படும்**

**23..உணவுச் சங்கிலி என்றால் என்ன?சான்று தருக.**

**ஓர் உயிரியில் இருந்து மற்றோர் உயிர்க்கு உணவு மூலம் சங்கிலித் தொடர் போல ஆற்றல் கிடைப்பது உணவுச் சங்கிலி எனப்படும்.**

**சான்று:மான் புல்லை உணவாகக் கொள்ளுதல்.**

**24.வனவிலங்கு வாரம் எப்போது முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது?**

**1972 லிருந்து ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் முதல் வாரம் வனவிலங்கு வாரம் கொண்டாடப் பட்டு வருகின்றது.**

## சிறு வினா விடைகள்:

**1.விவேக சிந்தாமணிப் பாடலில் அமைந்துள்ள கற்பனை நயத்தை விளக்குக.**

**தேன் உண்டு மயங்கிக் கிடந்த வண்டை நாவல் பழமெனப் பெண் ஒருவள் கையில் எடுத்துப் பார்த்தாள்.**

**வண்டு அவள் முகத்தை நிலவாகவும் , அவள் கையைத் தாமரையாக நினைத்து தாமரை குவிந்துவிடும் என்று எண்ணி பயந்து வண்டு பறந்தது.**

**2.காந்தியடிகளின் பண்புநலன்களைப் பாரதத்தாய் பாடல்வழி விளக்குக.**

**உண்மை , அறம் , பிறர் துன்பம் நீக்குதல் ,தியாகம் , ஒழுக்கம் கொண்டவர்.தீமை , துன்பம் ஆகியவற்றை ஓடச் செய்யும் கருணைக் கதிரவன் போன்றவர்.**

**தாய்மை உள்ளம் கொண்டவர்.**

**இத்தன்மைகளைக் கொண்டவர் காந்தியடிகள்.**

**அவரைப் பெற்ற பாரதத்தாயின் பாதங்களை வணங்குவோம்.**

SSM

ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com


**3.அஞ்சலையம்மாள் நடத்திய போராட்டங்கள் யாவை?**

1.நீலன் சிலை அகற்றும் போராட்டம்

2.உப்புக் காய்ச்சும் போராட்டம்

3.மறியல் போராட்டம்

4.தனியாள் போராட்டம்

5.வெளியனே வெளியேறு இயக்கம்.

**4.அம்புஜத்தம்மாளின் குணநலன்களை விவரிக்க.**

1.தமிழ் , ஆங்கிலம் , இந்தி,சமற்கிருதம் எனப் பலமொழிகளையும் திறம்படப் பயின்றார்.

2.கஸ்தூரிபாவின் எளிமையினால் ஈர்க்கப்பட்டு, எளிமையாக வாழ்ந்தார்.

3.பட்டு,பகட்டு,ஆங்கில மோகம் அனைத்தையும் துறந்தார்.

4.செல்வாக்கைப் பயன்படுத்தாதவர்.

**5.திருமூலர் குறிப்பு எழுதுக.**

பெயர் : மூலன் - பெயர் திரு பெயரடை பெற்று திருமூலனார் ஆனது.

காலம் :கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

**6.அறிவு வளர திருமூலர் கூறும் வழிவகை யாது?**

நோயால் உடல் அழிந்தால் உயிர் அழியும்.

அப்படி அழிந்தால் உண்மையறிவை அடைய இயலாது.

எனவே,உடலை வளர்க்கும் வழி அறிந்து உயிரை அழிவிலிருந்து காத்தல் வேண்டும்.

**7.வீரமாமுனிவர் - குறிப்பு எழுதுக.**

பெயர்: வீரமாமுனிவர்

இயற்பெயர் :

கான்ஸ்டாண்டின் ஜோசப்பெஸ்கி.

பிறந்த நாடு:இத்தாலி

அறிந்த மொழிகள்:இத்தாலி,இலத்தீன்,கிரேக்கம்,தமிழ்,தெலுங்கு,சமற்கிருதம்

படைப்புகள்:தேம்பாவணி,ஞானோபதேசம் , பரமார்த்த குரு கதை,தொன்னூல் விளக்கம் ,திருக்காவலூர்க் கலம்பகம்.

**8.தாய் மரியாள், குழந்தை இயேசுவிடம் காட்டிய அன்பு எதனைப் போன்று இருந்தது?**

தாய் மரியாள், குழந்தை இயேசுவிடம் காட்டிய அன்பு குகை ஒன்று குனிந்து கோலம் இட்டதைப் போல் இருந்தது.

**9.சிலப்பதிகாரத்தில் நாடகம் பற்றிய குறிப்புகளைப் புலப்படுத்துக.**

சிலப்பதிகாரம் மாதவியை நாடகக் கணிகை என்கிறது.

ஏதேனும் ஒரு கதையைத் தழுவி வேடம் இட்டு ஆடுவதனை நாடகம் என்கிறது.

நாட்டியம் , நாடகம் ஆகிய இரண்டிற்கும் பொதுவானது கூத்து என்கிறது.

**10.நாடகவியல் - குறிப்பு எழுதுக.**

நாடகவியல் நூலை எழுதியவர் : பரிதிமாற்கலைஞர்.

நாடகம்,அதன் விளக்கம்,வகைகள்,எழுதப்பட வேண்டிய முறைகள்,நடிப்புக்கு இலக்கணம்,நடிப்பவருக்கு இலக்கணம் - போன்றவற்றைக் குறிப்பிடுகின்றது.

**11.மனோன்மணியம் குறிப்பு எழுதுக.**

பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணியம் நூலை கி.பி.1891ல் வெளியிட்டார்.

லார்ட் லிட்டனின் மறைவழி நூலைத் தழுவி எழுதப்பட்டது இந்நூல்.

வடிவத்தாலும் பாத்திர அமைப்பாலும் சூழலாலும் தமிழ்ப் பண்பு இந்நூலில் மிகுந்திருக்கிறது.

**12.விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றிய நாடகங்கள் யாவை?**

கதரின் வெற்றி ,தேசபக்தி ஆகியன விடுதலைப் போராட்டக் காலத்தில் தோன்றிய நாடகங்கள் ஆகும்.

SSM

ச.சேட்டு மதார்சா ,எம்.ஏ,எம்.ஏ,எம்.பில்,பி.எட்,பிஹெச்.டி,பிஜிடிடிஆர். பட்டதாரி ஆசிரியர் - தமிழ் ,மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி, காவேரி சாலை,ஈரோடு -638001, அலைபேசி:9994142883 , 8883681115,settumatharsha@gmail.com



**13.நாடகத்தின் வாயிலாக நாம் அறிந்து கொள்வன யாவை?**

**புதுமைக் கருத்துகள்,அறிதல்,அன்பு,உறுதியான நெஞ்சம்,தெய்வ பக்தி,உயர்ந்த எண்ணம்.**

**14.சரயு நதி எவ்வாறு உலவியது?**

**சரயு நதி அழகான பூஞ்சோலை ,செண்பகக் காடு,தாமரைக் குளம்,நீர் நிலைகள் , பாக்குத் தோட்டம் ஆகியவற்றைக் கடந்து வயலை வளப்படுத்தி உடலுள் உயிர் செல்வதைப் போல் உலவியது.**

**15.பாரதிதாசன் குறிப்பு எழுதுக.**

**இயற்பெயர்: சுப்புரத்தினம்.**

**பெற்றோர்:கனகசபை - இலக்குமி**

**ஊர் :புதுச்சேரி**

**சிறப்புப் பெயர் :பாவேந்தர்,புரட்சிக்கவிஞர்**

**படைப்புகள்: பாண்டியன் பரிசு,குடும்ப விளக்கு,இருண்ட வீடு,தமிழியக்கம்,அழகின் சிரிப்பு முதலியன.**

**16.ஆலமரத்தின் விழுதும் வேரும் எவ்வெவற்றைப் போன்று காட்சி அளித்தன?**

**ஆலங்கிளைக்கு விழுதுகள் தூண்கள்.**

**தூண்கள் மரத்தைச் சுற்றி நிற்கும் வீரர்கள்.**

**வேர்கள் பாம்புக் கூட்டங்கள்.**

**ஆலமரம் வானை மறைக்கும் பந்தல்.**

**17.ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவன யாவை?**

**1.உடலால் அறிவது ஓர் அறிவு உயிர் - புல்,மரம்.**

**2.உடல் , வாயால் அறிவது ஈர் அறிவு உயிர் -நத்தை,சங்கு**

**3. உடல் , வாய்,மூக்கால் அறிவது மூவறிவு உயிர் - எறும்பு,கரையான்**

**4. உடல் , வாய்,மூக்கு,கண்ணால் அறிவது நான்கு அறிவு உயிர் -நண்டு,வண்டு.**

**5. உடல் ,வாய்,மூக்கு,கண்,செவியால்அறிவது ஐந்து அறிவு உயிர்-விலங்கு,பறவை**

**6. உடல் , வாய்,மூக்கு,கண்,செவி,மனத்தால் அறிவது ஆறு அறிவு உயிர்-மனிதர்.**

**18.காடுகளால் விளையும் நன்மைகள் யாவை?**

**மண்ணரிப்பைத் தடுத்தல்,**

**சிற்றாறுகள் தோன்ற காரணம்,**

**தொழில் வளர்ச்சிக்கு உதவுதல்,**

**மருந்துப் பொருள்,மூலிகைகள் தருதல்**

**ஆகியவை காடுகளால் விளையும் நன்மைகள் ஆகும்.**

**19.வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் எப் போது இயற்றப்பட்டது?அச்சட்டக் கருத்துகளை எழுதுக?**

**வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் 1972ல் இயற்றப்பட்டது.**

**விலங்ககுளை வேட்டையாடுவதைத் தடுத்தல்,**

**விலங்ககுளை அழிவிலிருந்து தடுத்தல்**

**- ஆகியவை இச்சட்டக் கருத்துகள் ஆகும்.**

## துணைப்பாடம்

## 1.மரத்தின் வேண்டுகோள்

**முன்னுரை :**

**மரம் கண்ணனிடம் விடுத்த வேண்டுகோளினைப் பற்றி இனிக் காண்போம்.**

**கண்ணனுக்குக் கனவு:**

**சுற்றுலா பற்றிய நினைவிலேயே கண்ணன் தூங்கிய போது கனவு ஒன்று வந்தது.என்னைக் காப்பாற்றுங்கள் என்று குரல் கேட்க , கண்ணன் ,"யார் என்று தேடினான்".அந்தக் குரல் வாடிப் போன மரத்துடையது என்பதை அறிந்தான்.**

SSM

**மரத்தின் புலம்பல்:**

**மரத்தின் நிலைக்கு யார் காரணம் என கண்ணன் வினவ, அதற்கு மரம் இந்த இடம் முன்னர் பூஞ்சோலையாகவும் ,மரம்,செடி,கொடி,பறவைகள் மிகுந்தும் இருந்தது.மனிதர்கள் காட்டை அழித்ததன் விளைவு இன்று நான் இப்படி ஆகிவிட்டேன்.எங்கள் அழிவு ,உங்கள் அழிவு என்றது.**

**மரத்தின் வேண்டுகோள்:**

**1.இயற்கையைப் போற்றுங்கள் ,**

**2.மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துங்கள்.**

**3சுற்றுப்புறத்தைதத் தூய்மையாக வைத்துக் கொள்ளுங்கள்...**

**4.காட்டுவளம் பெருக்குங்கள்.**

**- என்று மரம் கண்ணனிடம் வேண்டுகோள் விடுத்தது.**

**முடிவுரை:**

**ஆசிரியரிடம் கூறி கண்ணன் மரத்தின் வேண்டுகோளை நிறைவேற்றுவதாக முடிவெடுத்தான்.**

## 2.கண் திறந்தது

**முன்னுரை:**

**கண் திறந்ததுகதையின் மூலம் கவிதாவின் பெற்றோர் எவ்வாறு மனம் மாறினர் என்பதைப் பார்ப்போம்.**

**கவிதாவும் தோழிகளும்:**

**கவிதா 9 ஆம் வகுப்பு படிக்கும் மாணவி.அவளுக்குத் திருமணம் செய்யப் போவதாகப் பெற்றோர் சொல்லி அவளைப் பள்ளிக்குப் பத்து நாட்களாக அனுப்பவில்லை.அவளின் தோழிகள் மேரி,பேகம் ஆகியோர் கவிதாவின் வீட்டிற்கு வருகின்றனர்.தோழிகள் கவிதாவின் பெற்றோரிடம் எவ்வளவு எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்பதாக இல்லை.**

**ஐயாவின் அறிவுரை:**

**அந்த நேரத்தில் அவர்களின் தமிழ் ஐயா வருகிறார்.பெண்களைப் படிக்க வைக்கக் கூடாது என்று நீங்கள் நினைப்பது தவறு.ஔவையார்,இந்திராகாந்தி,கல்பனா சாவ்லா போல கவிதாவும் வருவாள்.படிப்பதற்குப் பணம் தேவையில்லை.அரசாங்கமே இலவசப் பாடநூல்,சீருடை,நோட்டுகள்,மதிய உணவு.பேருந்து வசதி,மிதிவண்டி எனப் பலவற்றைக் கொடுக்கின்றது என்றார் ஐயா.**

**கண் திறந்தது:**

**இவ்வளவு வாய்ப்புகள் ஏழைகளுக்கு இருப்பதை நாங்கள் அறியவில்லை.எங்கள் கண்ணைத் திறந்து விட்டீர்கள்.நாளை முதல் கவிதா பள்ளிக்கு வருவாள் என்றனர் அவளின் பெற்றோர்.கவிதாவும் மாநிலத்தில் முதல் மதிப்பெண் எடுப்பதாகவும் உறுதி கொண்டாள்.**

**முடிவுரை:**

**பெண்கள் நாட்டின் கண்கள் என்பதை உணர்ந்து, அவர்களைப் படிக்க வைப்போம்.பெண்மையைப் போற்றுவோம்.**

## பொதுக்கட்டுரை

### 1.காகிதம் - தன் வரலாறு கூறுதல்.

**முன்னுரை:**

**மாணவர்களே! நான் தான் நீங்கள் பயன்படுத்தும் காகிதம் பேசுகின்றேன்.கேளுங்கள்.**

**உருவான விதம்:**

**5000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தியர்கள் பேப்ரஸ் மரப்பட்டையைக் கொண்டு உருவாக்கினார்கள்.பிறகு சீன நாட்டில் டுசாய்லுன் மரப்பட்டை கொண்டு என்னை உருவாக்கினார்.மரக் கூழில் இருந்து என்னை உருவாக்கினர்.**

**புத்தகம் ஆனேன்:**

**ஜான் கூடன் பர்க் என்பவர் அச்சுக்கலையைக் கண்டுபிடித்த பிறகுதான் நீங்கள் நான் புத்தகம் ஆனேன்.**

**பயன்பாடு:**

**அலுவலகம் , பள்ளி ,மருத்துவமனை,ஆய்வகம் என எல்லா இடங்களிலும் பயன்படுகிறேன்.**

SSM

பணமாக,அரசு ஆணையாக நான் உங்களிடம் வருகிறேன்.

**முடிவுரை:**

நான் அனைவருக்கும் பயன்படுவது போல நீங்களும் அனைவருக்கும் பயன்பட வேண்டும்.வருகிறேன் ! நன்றி !

**2.நான் மருத்துவரானால்....**

**முன்னுரை:**

நான் மருத்துவரானால்.... என்ன செய்வேன் என்பதைக் கூறுகிறேன்.

**விரும்பக்காரணம்:**

கல்வி , பணம், பதவி இருக்கலாம் ஆனால் உடல் நலம் இல்லை என்றால் எதுவும் செய்ய இயலாது.பிறர் துன்பம் போக்குவது தான் சிறந்தப் பணி ஆகும்.ஆகவே நான் மருத்துவராவேன்.

**தொண்டால் உயர்ந்தோர்:**

நைட்டிங்கேல் அம்மையார்,தனக்குத் தானே மருத்துவரான காந்தியடிகள்,ஆதரவற்றோர் ,நோயாளிகளைக் காத்த அன்னைத் தெரஸா,புற்றுநோயளிகளைக் காப்பாற்றிக் கொண்டு வரும் டாக்டர் சாந்தா இவர்கள் எல்லாம் மருத்துவத்துறைக்கு என்னைத் தூண்டியவர்கள்.

**என்ன செய்வேன்?:**

1.ஏழைகளுக்கு இலவசமாக மருத்துவம் செய்வேன்.

2.கிராம மக்களுக்கு உயர்தர மருத்துவம் செய்வேன்.

3.24 மணி நேரமும் மக்களைக் காப்பாற்ற உழைப்பேன்.

4.முதியோர்,மாற்றுத்திறனாளிகள்,ஆதரவற்றோருக்கு இலவசமாக மருத்துவம் செய்வேன்.

**முடிவுரை:**

மருத்துவத் தொழிலை மக்கள் தொண்டாக நினைப்பேன்.பணம் சம்பாதிக்கும் தொழிலாக நினைக்கமாட்டேன்.மனிதநேயம் உள்ள மருத்துவனாக இருப்பேன்.

**3.எங்கும் கணினி! எதிலும் கணினி**

**முன்னுரை:**கணினி இல்லாத இடமில்லை.அத்தகைய கணினி பற்றி இனிக் காண்போம்.

**கணினி:**அ.ஆங்கிலத்தில் 'கம்யூட்டர்' என்பது தமிழில் கணினியைக் குறிக்கும்.ஆ.மின்சாரத்தால் இயங்குவது.இ.தொலைக்காட்சி பெட்டி போல இருக்கும்.ஈ.எல்லா வேலைகளையும் செய்யும்.

**வகைகள்:**

1.தனிநபர் கணினி2.மடிக் கணினி3.பல்லூடக்கணினி4.சூப்பர் கணினி- எனப் பல வகைகள் உள்ளன.

**இணையம்:**

தொலைபேசியுடன் கணினியை இணைத்து உலகத்தை ஒன்று சேர்ப்பது இணையம்.

ஆங்கிலத்தில் இதனை 'நெட்' என்பர்.

எல்லாத் தகவல்களையும் இதில் பெறலாம்.

**பயன்கள்:**

1.மின் அஞ்சல் அனுப்பலாம்.

2.கணக்குப் போடலாம்.

3.படம் பார்க்கலாம்.

4.பாடம் படிக்கலாம்.

5.நண்பர்களுடன் பேசலாம்.

6.அரட்டை அடிக்கலாம்.

7.கல்வி கற்கலாம்.

8.செய்திகளைத் தெரிந்து கொள்ளலாம்.

**முடிவுரை:**

அனைவரும் கணினியைக் கற்போம்! அனைவரும் கணினியைப் பன்படுத்துவோம் !

---

**ஆக்கம்:**
**ச.சேட்டு மதார்சா(ப.ஆ -தமிழ்) மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,ஈரோடு-1**

SSM